1972 ஆகஸ்ட் 18]

பட்டு, தமிழ் நாட்டிற்கே திரும்பி வருகிறது. இப்பேர்ப்பட்ட போக்கை மாற்றுவதற்கு விசைத் தறிகளை வேகமாகக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 12,500 விசைத் தறிகள் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

சிற்பக் கலை

*165 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா?

தமிழகத்தில் சிற்பக் கலையினைப் பாதுகாத்திட அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கற்சிற்பக்கலையைப் பாது காப்பதற்காக மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கற்சிற்பக் கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கு உற்பத்திக்கூடம் ஒன்றும் இணைக்கப்பட்டு வெளியிலிருந்து வரும் தேவைகளுக்கேற்ப சிற்பங்கள் செய்து கொடுக்கப்படு கின்றன.

திரு. என். கிட்டப்பா : சிற்பக் கலைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பைக் கூட மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே? அதையாவது மாநில அரசு மேற்கொண்டு செயல் முறைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பழைய சிலைகளைப் பாது காப்பது பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றி நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மாநிலத்தினுடைய பொறுப் பில் வரவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பட்டு உற்பத்தி

*166 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்ய 'மல்பரி' மரங்கள் வளர்க்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகின் றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நம் தமிழ்நாட்டில் தட்பவெட்ப நிலைகளை அனுசரித்து மல்பரியை செடிகளாகவே (Bush plantation) பயிர் செய்து வருகிறார்கள். பட்டு உற்பத்தியை அதிகரிக்க தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தெங்கனி கோட்டை முதலிய தாலுக்காக்களில் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை முசுக்கொட்டை அதிக அளவில் பயிரிடுவதற்காக குத்தகைக்குக் கொடுத்து வரும் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. சென்ற ஆண்டு 2,000 ஏக்கரா அளவு கொடுக்கப்பட்டு, புதியதாக 800 குடும்பங்கள் முசுக்கொட்டையை பயிரிட்டுப் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

திரு. ஏ. எம். இராஜா : தாளவாடிப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டு மிகவும் உயர்ந்த ரகம் என்று கூறப்படுகிறது. அந்தப் பகுதியிலே மார்கெடிங் பெசிலிடிஸ் இல்லாத காரணத்தினால், அவர்கள் உற்பத்தி செய்ததை மைசூர் மாநிலத்திற்குக் கொண்டு போய் வியாபாரம் செய்ய வேண்டிய சங்கடமான நிலை இருந்து வருகிறது. அந்த நிலைமையைப் போக்க நம்முடைய மாநிலத்திலேயே கோவை மாவட்டத்தில் மார்கெடிங் பெசிலிடிஸ் ஏற்படுத்திக் கொடுத்தால் தாளவாடியில் உயர்ந்த ரகப் பட்டு உற்பத்தியை அதிகமாகச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த அரசு இந்தத் துறையில் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதனுடைய விலை பக்கத்தில் இருக்கிற மைசூர் மாநிலத்தோடு போட்டி போட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த மாநிலத்தில் பட்டு வளர்ச்சிக்கும், உற்பத்தி செய்வது விற்பனையாவதற்கும் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்கலாம் என்பதற்காக நம்முடைய அரசின் சார்பில் இதற்கென்று ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டு, தாளவாடி, தர்மபுரி மாவட்டத்தில் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister whether the land is given on lease for planting 'mulberry' trees and if so, whether the Government will give free assignment so that the cultivators can grow these trees well?

1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிரந்தரமாக நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக உள்ள பிரச்னை. சொந்தமாக்கி விட்டால் அவர்கள் அந்த நிலங்களில் மல்பரி பயிர் செய்யாவிட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்ற கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடிய வில்லை. இந்த சிக்கல் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது.

Chalk Crayons Unit

* 167 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open any Chalk Crayons Unit at Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மாநிலத்தில் இதன் மூலப் பொருள்கள் எந்தெந்த இடங்களில் கிடைக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருச்சி மாவட்டத்திலே அரியலூர் பகுதியிலே கிடைக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பற்றி விவரம் இல்லை.

கங்கை-காவிரி இணைப்பு.

* 168. வினா—திரு. கே. ஏ. வகாப் :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கங்கை, காவிரி நதிகளை இணைக்க, ஐ.நா. நிபுணர்கள் உதவியுடன் மத்திய அரசு சர்வே நடத்துவதாக தமிழ்நாடு அரசிற்குக் குறிப்புகள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.